
The Beatitudes
Blessed are the poor in spirit;
for theirs is the kingdom of heaven.
Blessed are those who mourn:
for they will be comforted.
Blessed are the meek;
for they will inherit the earth.
Blessed are those who hunger
and thirst for righteousness:
for they will be filled.
Blessed are the merciful:
for they will be shown mercy.
Blessed are the pure in heart:
for they will see God.
Blessed are the peacemakers:
for they will be called children of God.
Blessed are those who are persecuted
for righteousness' sake:
for theirs is the kingdom of heaven.
அமைதியைத் தேடி
PEACE
"Lord, make me an instrument of thy peace.
Where there is hatred, let me sow love,…"
Pax Ravichandra
pax.ravichandra@gmail.com
24-11-2024
+94763223960

அமைதியைத் தேடி

இறைசாயலாய் இறைவன் படைத்த ஆதி மனிதனோ
தூய மனம், ஏதேனோ வாழிடம்- அலகையின் சாயலாய்
தன்னைப் படைத்த மனிதனோ ஆணவத்தின் உருவம்
எங்கும் யுத்தம், எரிநரகாய் மாறிய உலகம்






பொருளில்லாத வாழ்வு நடைப்பிணமாக
உயிர் வாழ்வது இன்பம் சுவைக்க என்றாக,
போராடி உயிர் விடுவது செம்புரட்சியானது, மனிதம்
அல்லாட அமைதி எட்டாத வான் நிலவானது

வரலாற்றில் பெருக்கெடுத்த குருதி வெள்ளம்
லெனின், மாவோ, பிடல் காஸ்ரோ எனத்
தொடர்ந்த புரட்சியோ அரியணைகளைப்
புரட்டிப்போட்ட சுனாமி அலைகளின் சின்னம்

சமத்துவம், பொதுவுடமை கோஷமானது
சட்டம் ஒழுங்கு சர்வாதிகாரி உடைமையானது
மதம் வாழும் மனிதில் மதப்பயங்கரவாதம் நீதியானது
அன்பு, உண்மை, இரக்கம் கேலிக்கூத்தானது





சமூக, பொருளாதார, இன விடுதலைக்காய்
ஆயுதப் போராட்டங்கள், அகதி, விதவை, அநாதை,
அங்கவீனர் என மனித விகாரங்கள்
கண்ணீரில் நிலைத்த அப்பாவி மனிதர்கள்

ஆபேலின் குருதி இன்றும் இறைவனைக் கதறியழைக்க,
தொடரும் அண்ணன், தம்பியைக் கொல்லும் அவலம்,
பலியை அல்ல இரக்கமே இறை வேண்டுவது
மாறாத இயேசு பெருமானின் முழக்கம்

அழிவுப் பாதையில் முழக்கம்
வல்லமையே மாட்சி என்னும் மாறாத வேதம்
அன்பே தெய்வம், உண்மையே பாதை
உலகு அறிந்தும் செவிகொடாத கீதம்

என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் ஆயுதமோகம்
சிந்திடும் குருதியால் சிவந்திடும் பூமி
அன்பே சிவம் ஆணவம் அறியாத சாமி

உள்ளுணர்வின் உன்னதமாய் இறைவன்
தாழ்நிலையில் ஆணவ சொரூபமாய் அலகை
இரண்டிற்குமிடையே மனிதன்- உயர்ந்தால் தேவன்
தாழ்ந்தால் அலகை-வாழ்வு நம்கையில்



இறைவா உன் அமைதியின் கருவியாய் என்னை மாற்று
எங்கு பகை உண்டோ அங்கு அன்பையும்
எங்கு மனவருத்தம் உண்டோ அங்கு மன்னிப்பையும்
எங்கு ஐயம் உண்டோ அங்கு நம்பிக்கையையும்
எங்கு இருள் உண்டோ அங்கு ஒளியையும்
எங்கு துன்பம் உண்டோ அங்கு இன்பத்தையும்
நான் அளிக்க முற்படுவேனாக-

நான் என் ஆறுதலுக்காக அலைவதை விட்டு
ஆறுதலைக் கொடுக்க முற்படுவேனாக
என்னை மற்றோர் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை
விடுத்து, பிறரை புரிந்துகொள்ள விழைவேனாக
என்னை மற்றோர் மன்னிக்கவேண்டும் என்பதை விடுத்து
மன்னிக்க முற்படுவேனாக, என்னை மற்றோர்
நேசிக்க வேண்டும் என்பதை விடுத்து
பிறரை நேசிக்க முற்படுவேனாக-ஏனெனில்
கொடுப்பதன் மூலம்தான் பெற்றுக்கொள்ள முடியும்
மன்னிப்பதன் மூலமதான் மன்னிப்பு அடையமுடியும்
மடிவதன் மூலம்தான் நிலைவாழ்வை
அடையமுடியும்-ஆமேன்

Lord, make me an instrument of your peace.

Where there is hatred, let me sow love;

where there is injury, pardon;

where there is doubt, faith;

where there is despair, hope;

where there is darkness, light;

and where there is sadness, joy.

O Divine Master, grant that I may not so much seek

to be consoled as to console;


to be understood as to understand;

to be loved as to love.

For it is in giving that we receive;

it is in pardoning that we are pardoned;

and it is in dying that we are born to eternal life.



The Beatitudes

- Blessed are the poor in spirit; for theirs is the kingdom of heaven.
- Blessed are those who mourn: for they will be comforted.
- Blessed are the meek: for they will inherit the earth.
- Blessed are those who hunger and thirst for righteousness: for they will be filled.
- Blessed are the merciful: for they will be shown mercy.
- Blessed are the pure in heart: for they will see God.
- Blessed are the peacemakers: for they will be called children of God.
- Blessed are those who are persecuted for righteousness' sake: for theirs is the kingdom of heaven.

Matthew 5:3-10

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை
பூவுலகில் நல்மனத்தவருக்கு அமைதி
வானவர் பாடிய கிறிஸ்து பிறப்பின் நற்செய்த்தி
உன்னதமும், நல்மனதும் ஒன்றே-அது நம்முள்ளே

எளிய மனத்தவருக்கு இறைரசு,-துன்புறுவோருக்கு ஆறுதல்
கனிவுடையோருக்குப் பூமி , நீதியின்மேல் வாஞ்சையாய்
இருப்பவருக்கு திருப்தி, இரக்கமுடையவருக்கு இரக்கம்
தூய மனத்தவருக்கு சத்திய தரிசனம்-சமாதானத்தை
நிலை நாட்டுபவருக்கு இறைமக்கள் என்னும் உரிமை
நீதியின் பொருட்டு துன்புறுவோருக்கு இறையரசு
மதங்கடந்த மனுமகனின் மலைப்பொழிவு
ஆணவத்திற்கு மாற்று மருந்து-இறையரசுக்கு வழி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-16-11-2024

அந்த அமாவாசையிரவு



அந்தி வாடி உதிர, அச்சுறுத்தும் காரிருள் மலர,
இந்திய அமைதிகாக்கும் படை உலா வரும் இரவு,
அஞ்சி உதிக்காத நிலவு- பொன்மேனியைச் சிதைத்து
பூ நெஞ்சை நஞ்சாக்கிய கொடிய அமாவாசையிரவு

அன்னையும், மகளும் பூட்டிய வீட்டில்
அன்பு நாயோ காவலுக்கு வெளியில்-வாசலில்
நடுச்சாமத்தில் ஓயாது கேட்ட நாயின் குரைப்ப
இருவர் நெஞ்சுக்குள்ளும் அச்சத்தின் ஆர்ப்பரிப்பு



டுமில் எனக்கேட்ட துப்பாக்கிச் சத்தம்- அஞ்சிப்
படபடவென சிறகடித்துப் பறந்த கூகையின் ஆதங்கம்
குரைப்பு ஓய்ந்திட, காற்றில் கலந்து வந்த நாயின்
அழுகை, அஞ்சிய நெஞ்சங்களில் ஓயாத தொழுகை



டும், டும் எனக் கதவை இடித்த ஓசை
எமன் வரவைக் கூறும் இடியொசை
தட்டுங்கள் திறக்கப்படும் கடந்த-ஆளும்
ஆயுதவாதிகளின் அதிகார மமதை

இனியும் தாமதித்தால் கதவு பெயர்ந்துவிழும்
விளக்கை எரியவிட்டு, கதவைத் திறந்த அன்னை
காலால் எட்டி உதைத்து, உள்ளே நுழைந்த
அமைதி காக்கும் படையோ சாக்கடை

ஒன்று விடாமல் வீட்டைச் சோதனையிட்டவர்,
அப்பா, அண்ணன், தம்பி என ஆண்கள் யாருமில்லையா?
கேள்வியில் நஞ்சு, அண்ணன், தம்பியர் எல்லாம்
விடுதலைப் புலிகள்தானா? அஞ்சி ஓடி மறைந்தனரா?

மயங்கிக் கிடந்த அன்னையை ஒருபுறம் ஒதுக்கி
உம்மைச் சோதனையிட வேண்டும், வாரும்
படுக்கை அறைக்குள் தள்ளி, ஆடை களைந்து
அம்மணமாக்கி ஆணுறுப்பை விட்டு உழுத தீமை

உள்ளம் குமுற, உரோமம் நடுநடுங்கக்,கண்ணீர் கசிந்தோட,
ஒருவர் மாறி ஒருவர் புரிந்த பாலியல் வன்புணர்வு,
ஒற்றுமையில்லாப் போராளிகளால் வந்த பொல்லாங்கு,
எட்டப்பனும், கட்டப்பொம்மனும் தமிழன் என்ற இறுமாப்பு

Indian Foreign Minister S. Jaishankar's role in IPKF War Crimes..!

-Unpacking India's Role in Sri Lanka: Allegations of Arming Paramilitary Groups, Sexual Violence against Sri Lankan Tamil Women





கூட்டு வன்புணர்வால் சிதைந்த மனம்,
நொந்தமேனி, சிவந்த படுக்கை விரிப்பு
சந்தன மலராய் மணந்தவளை, சாக்கடை
மலமாய் மாற்றி அமைதி காத்த படை

விடியலில் குருதி வெள்ளத்தில் குண்டு துளைத்து
மாண்டு கிடந்த நாயோ நன்றி மறவாத ஜீவன்,
விடியாத அமாவாசையிரவாய் மனம் கறுக்க- 'நடமாடும்
வெடிகுண்டாய்'' மாறிய நங்கையோ வேங்கை

மாதங்கள் சில செல்ல, தெருவில் உலா வந்த
அமைதிகாக்கும் படை, மைவிழி சிரிக்க,
மலர்க் கூந்தல் அழைக்க, செவ்வாயில் குறுநகை,
காண்போரை மயக்கும் கன்னியோ அழகின் திருச்சபை

அழகைக் கண்டு மயங்கிய அமைதிப்படை,
மனிதவெடிகுண்டாய் அழகு நங்கை- மண், விண்
அதிரத், தன்னை வெடித்து அரக்கர் படை அழித்து
உருத்திர தாண்டவமாடிய காளியாய் வேங்கை

பாடையில் போக வழியின்றிப் பிண்டமாய்ச் சிதறுண்ட
படையினர், வெற்றிப் பதக்கமும், வீரசுவர்க்கமும்
தேடிச் சென்ற வீரர்கள், சென்ற பாதையிலே
துண்டுகளாய் மனித உடலங்கள், குருதியாறுகள்





தலை வேறு உடல் வேறாகச் சிதறிய
மங்கையின் வதனத்தில் அமைதிப் புன்னகை
அரக்கரை அழித்திட யாத்த குருதி வேள்வி
வேங்கையாய் வடிவெடுத்த மங்கையோ ஆகுதி

ஆயுதம் களைந்து எம்மை அம்மணமாக்கி
தமிழ் ஈழக்கனவை சிதைக்க முனைந்த
அமைதி காக்கும் படை- ஒட்டுக் குழுக்களால்
எம் தலைமை அழிக்க முயன்ற எட்டப்பர் படை

இறுதி யுத்தத்தில் எம் போராட்டத்தைக் காட்டிக்
கொடுத்து, ஆயுதமும், ஆலோசனையும் வழங்கி
எம் ஈழக்கனவை அழித்த இந்தியர்
எம் உடன் பிறப்பென முழங்கும் சகோதரர்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே

Pax Ravichandra-23-10-2024

ஏதேனும் எரிநரகும்

உலகெங்கும் யுத்தம்-இறைவனை
இன்றும் கூவியழைக்கும் ஆபேலின் இரத்தம்
அன்னையர் குழந்தைகள் துயரில்
துன்புறும் கிறஸ்துவின் தரிசனம்






சிறுவர் போராளிகளாய்ச் சிதைந்த வாழ்வு
கொலையும், கலையாக மனச்சிதைவு
அங்கவீனராகிட அநாதைகளான உறவு
அமைதியோ எட்டாத வான் நிலவு

பெற்றவயிறு பதறப், தந்தை மனம் துடிக்கப் பிள்ளையை
கொள்ளைப் பொருளாய் திருடிச் சென்ற தீவிரவாதிகள்,
குழந்தை மனம் கதறப்-போராளியாய் உருமாற்றி, பூ மனதை
சிதைத்து, கொலையாளியாய் மாற்றிய போராளிகள்?

கொல் அல்லது கொல்லப்படுவாய்
அரக்கர் யாக்கும் அசுரயாகத்தின் மந்திரம்
உயிரும், உடைமையும் ஆகுதி- அன்பு
உண்மை, கருணை வேண்டாத நீதி





அஞ்சிக் கதறிப் பிரிந்த இளங்கன்று,
உறவைத் தேடும் பெற்றோர் உறவு
கண்களில் கண்ணீர் நிலைக்க-கலைந்த
தாய், தந்தையரின் வண்ணக் கனவு

போரின் உச்சத்தில் அச்சத்தில் மடிந்த
சிறுவர் போராளி, அழுது பிறந்த
சிறுவனோ -அன்னைக்கு
மீண்டும் மகனான அரிய வெகுமதி

கண்களில் ஈரம், நெஞ்சில் இமயப் பாரம்
கண்ணீரில் அழியாத சோகம்
சிந்திய குருதியால் சிவப்பான வரலாறு
வற்றாமல் பாயும் கண்ணீர், குருதியாறு

கண்ணீரில் பெற்றோர் நீராட-குருதியில்
சிறுவர் போராளியாய் மகன் போராட, அழுகையும்,
தொழுகையும் ஒன்றாகி-அப்பாவிகளின் இரத்தம்
இறைவனைக் கதறியழைக்கும் சத்தம் கேட்கிறதா?


கண்ணீருக்கும், குருதிக்கும் சுவையும்
நிறமும் ஒன்று, அழுகையும், துயரும்
அனைவருக்கும் ஒன்று- அன்பும், அமைதியும்
நல்மனங்கள் தேடும் பெருநிதியாய் இன்று





இனம், மதம், மொழி, நிறம்
மனிதத்தைப் பிரித்த கொடுமை
இல்லாமையால் வாடும் ஏழை
இருப்பதைப் பகிராத செல்வனோ கோழை

கதிரும், நிலவும் ஒற்றுமையாய் உலாவ
கானக்குயிலும், கலாபமயிலும் பாடி ஆட
வண்ணப் பூக்கள் மலரும் ஏதேன் வனம்-இன்றோ
யுத்தம் தீய்த்திட கருகிடும் பாலை நிலம்





வாக்களிக்கப்பட்ட பூமியெங்கும் யுத்தம்
வற்றாமல் பாயும் ஆறாய் மனித இரத்தம்
அழுகைச் சுவரிலும், அல் அஃக்ஸாவிலும்-வெற்றிக்காய்
இறைவனைத் தொழுதிடும் வேண்டாத சத்தம்

யுத்தமோ வாழ்வை எரிநரகாக்க
இல்லிடமிழந்த அகதிகள், பெற்றோரை
இழந்த அநாதைகள், கஞ்சிக்கும்,கூழிற்கும்
கையேந்தி மனிதத்தைப் பழிக்கும் நிகழ்வுகள்

கண்காணாத இடத்தில் கைதியான இஸ்ரேலியர்
கண்மறைந்து தாக்கும் ஹமாஸ், ஹிஸ்புல்லா
பயங்கரவாதிகள், கண்மூடித்தனமான குண்டு வீச்சு
களப்பலியாகும் அப்பாவிகளின் மூச்சோ பெருமூச்சு





அழுகைச் சுவராய் மாறிய பேராலயம், கண்ணீரோடு
தொழுதும் காயங்கள் ஆறாத மனங்களில் ஏது நிம்மதி,
வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாய் அல் அஃக்ஸா,
விழுந்து தொழுதும் அமைதி எட்டாத நிலவான சங்கதி

மண்ணிற்காய் யுத்தங்கள்-மடிந்து புதைந்து
மண்ணாகும் பல்லாயிரம் உடலங்கள்
அன்பிற்காய் ஏது தொழுகைகள்-அமைதிக்காய்
எங்கே வேண்டுதல்கள்,எல்லாம் மதவேஷங்கள்

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை- பூவுலகில்
நல்மனத்தவருக்கே அமைதி, வானவர் நற்செய்தி

Pax Ravichandra-14-11-2024

இசை விழா-Oct 7. 2013

ஈர விழிகள் வானை வெறிக்க, இரத்தம் தோய்ந்து
விறைத்த உடலங்கள் எங்கும் சிதறிக் கிடக்க
கண்ட விழிகளில் கண்ணீரின் ஆட்சி
மனிதத்தை அச்சுறுத்திய பயங்கரவாத நிகழ்ச்சி





கொலைக்களமாய்க் காட்சியளித்த மைதானம்
இசை விழாவைக் கொலை விழாவாக்கி,
ஹமாஸ் போராளிகள் நடத்திய ஈவு, இரக்கமற்ற
தாக்குதலோ ஏற்காத பயங்கரவாதம்

இசை விழா களைகட்ட, இளைய தலைமுறை
பாட்டுக்கு ஆட்டம் போட, இன்பமான இராப்பொழுது
காதலன் தோளில் தலைசாய்த்து களித்த உறவு
விடியலில் எல்லாம் கலைந்த வண்ணக் கனவு



விடியாத வேளையில் குண்டுகளால்
விழித்த பயங்கரப் பொழுது- மனிதர்களை துரத்தி
விலங்குகளாய் வேட்டையாடி, மங்கையரைப் பாலியல்
வல்லுறவால் துன்புறுத்திக் கொன்ற கறுத்த இரவு

கதறக், கதறக் அன்னையரை, கன்னியரை
பாலியல் வல்லுறவு செய்து காமம் தணித்த மிருகங்கள்,
தாய்க்குலத்தை சிதைத்து சின்னா பின்னமாக்கி
எரியூட்டி சீரழித்த பயங்கரவாதிகளின் கொடுமைகள்

பண்ணை வீட்டில் தந்தையை சுட்டுக் கொன்று,
குழந்தையை அனல் அடுப்பில் வேகவிட்டு, இளந்தாயைக்
கற்பழித்த நெஞ்சிலே ஆலகால நஞ்சு, கருகிக் குழந்தை
மணக்க, கண்ணீர் சிந்தி அன்னை மனம் வேக,
விந்தை விதைத்து வெறியாடிய மிருகம், சிந்தை குளிர
தாயையும் கொன்று வெற்றி என்ற குரூரம்





தணியாத குருதித் தாகம் தீர்க்க ஹமாஸ்
பயங்கரவாதிகள் ஆடிய ருத்திரதாண்டவம்
குருதியில் நீராடி, காமபோகத்தை கொண்டாடி
அரக்கர் யாத்த அசுர யாகம்

விடியலில் இஸ்ராயேல் எங்கும் கேட்ட அழுகை, கொடூரமாய்
கொலையுண்ட உறவுகளால் மனங்களில் தொழுகை
உயிரும், மானமும் ஊசலாட, உறவுகள் கண்ணீர் சிந்தியழ
கடத்தப்பட்ட கைதிகள் நெஞ்சில் அச்சத்தின் ஆளுகை
பயங்கரவாதிகள் நெஞ்சில் வெற்றியின் பேருவகை



எங்கள் வண்ணக் கனவுகள் வேரோடு சாய்ந்திட
எங்கள் பாடல் அழுகையும், ஒப்பாரியுமாய் மாறிட
இதயம் துடிக்க, பெற்ற வயிறு பற்றி எரிய
கண்ணீரைப் பரிசளித்த ஹமாஸ் பயங்கரவாதிகள்



பயங்கரவாதத்தின் இரணங்கள் ஆறவில்லை
இரத்த வாடை மறையவில்லை
மண்ணிற்குள் புதைந்த சொந்தங்கள்
கைதிகளாய் காணாமற்போன பந்தங்கள்

அன்னையர், தங்கையர் முகங்களில் கண்ணீர்க் கறை-
விடாது ஒலிக்கும் எம் போர்ப்பறை, காஸாவிலிருந்து
லெபனானுக்குத் தொடரும் யுத்தம்-ஹமாஸ்,
ஹிஸ்புல்லாவை அழிக்கும் ஓயாத குண்டுச் சத்தம்



கொண்டாடும் விழாவை, கொன்றாடும்
விழாவாக்கிய-ஹமாஸ் பயங்கரவாதம்,
வாழும் தேசத்தை எரிநரகாக்கிடும் யுத்தம்-
இறைவனைக் கூவியழைக்கும் ஆபேலின் இரத்தம்



கண்ணுக்கு கண், பல்லிற்குப் பல் வாழும்
நீதியான வேதம், ஐவேளைத் தொழுகையும்
சுருதி பிசகாத கானம், அழுகையும்,
ஒப்பாரியும் கடந்த வன்மம் தேசிய கீதம்?

பகைமையை பகைமையால் தணிக்க முடியாது
பகைமையை அன்பினால் தணியுங்கள்
மதம் கடந்த என்றுமுள்ள தர்மம்
பகவான்கள் சொல்லிய அன்பின் வேதம்

குருதியால் எழுதிய வெற்றி, குருதியால் அழிந்திட
கரையுடைத்துப் பாயும் கண்ணீர்க் கங்கை,
குருஷேத்திரப் போரிலும் அநீதி- பாரோ,யாவே
யத்தத்திலும் வற்றாத குருதி, விடுதலையோ
அன்பினால் அகிம்சை யாக்கும் புனித வேள்வி



அன்பினால் மனங்களை வெல்லுங்கள்
உண்மையினால் உலகை வளமாக்குங்கள்
ஒன்றே குலம், அன்பே தெய்வம் என்பதே நீதி
சகோதரர் நாம் என்பதே அமைதிக்கு வழி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே

Pax Ravichandra-20-11-2024

இஸ்ராயேல்





எங்கள் கண்களில் காயாத ஈரம்
எங்கள் மனங்களில் மறையாத சோகம்
கண்ணீர், செந்நீரில் மூழ்கித் தத்தளிக்கும்
வாழ்வில் நாளும் போராட்டம்

எங்கள் வரலாறு எங்கும் யுத்தம்
அடிமையாய்ச் சிறைபட்டு அல்லலுற்ற துன்பம்
ஹிட்லர் எம் இனத்தை அழித்த சாபம்
ஏகன் இறைவனிடம் நாளும் எம் செபம்

அறுபது இலட்சம் சொந்தங்கள் அநாதைகளாய்
மடிந்த கொடுந்துயரம், இனவழிப்பாய்
நாட்சிகளின் வெறியாட்டம், குப்பைகளாய்
வதை முகாம்களில் எம்மவர் வற்றிய உடலம்



நச்சு வாயுவை சுவாசித்து நாளும்
கொடிய மரணம், நாம் வழிபட்ட இறைவன்
எம்மைக் கைநெகிழ்ந்த அவலம்
உலகிற்கு எம் வாழ்வோ கசப்பான பாடம்

எங்கள் புதைகுழியை நாம் தோண்டிட
எம் மண்டையைத் துளைத்த தோட்டாக்கள்
எங்கள் உடைமைகளைக் கொள்ளையிட்டு
எம் உயிரில் விஞ்ஞானிகளின் ஆய்வுகள்



இறைகுலம் நாம், இறை வாக்களித்த தேசம் யூதேயா எம் நாடு,
ஆண்டுகள் பலநூறு போனபின்பு நாம் வாழ இஸ்ராயேல் தேசம்,
சுதந்திரம் கொண்டாடி முடிந்திட ஒலித்த யுத்த கோஷம்
அன்று பூண்ட போர்க்கோலம், இன்றும் குலையாத எம் வீரம்

பாலும் தேனும் ஓடும் நாட்டில்,
நாளும் சிந்தும் கண்ணீர், குருதி,
அமைதியின் நகர் ஜெருசலேம்- நாற்புறமும்
எதிரிகள் சூழ நாளும் போர்க்கோலம்

எமக்காய்ப் போராட எம்மைத் தவிர
எமக்கு யாருமில்லை, ஆண், பெண் பேதமின்றி
அனைவரும் போராடிக் காக்க, இஸ்ராயேல்
இறை தந்த தேசமன்றி வேறு தேசமில்லை

அழுகைச் சுவர் எம் வரலாற்றின் சான்று
அல் அஃக்ஸா எம் தேசத்தை அடிமை கொண்ட
துயரத்தின் சான்று, சகோதரர் நாம் அறியாத பாவம்
எதிரிகளாய் போராடல் விதி வகுத்த சாபம்



ஹூ த்தி, ஹிஸ்புல்லா, ஹமாஸ், ஈரான்,
எம்மைத் தாக்க, இரவும் பகலுமாய் ஆண்டு
ஒன்றுக்குமேலாய் எம் போர்க்கோலம்
அமைதி கேள்விக் குறியான அவலம்



யுத்தம் கொடிய சாபம், பத்துக் கொள்ளை நோய்களின்
ஆரவாரம், பாரோ மனம் கல்லான அவலம்,குருதியும்,
நெருப்பும் செங்கடலாய்ப் பொங்க வானெங்கும் ஏவுகணை
பயங்கரவாதத்தால் உலகோ எரிநரகான அவலம்

இன்றும் இஸ்ராயேல் மக்களைக் காத்திட
வல்ல யாவேயிற்கும், பாரோவுக்கும் இடையே பலத்த
போராட்டம், என் மக்களை அமைதியில் வாழவிடு,
கைதிகளை போகவிடு மோஸேயின் ஓயாத முழக்கம்

பாவாடைத் தாவணியில் பார்த்த கன்னியர்
பூவாடை வீசி போர்க்கோலம் பூண்டு வர, அன்னையர்
மனங்களில் சோகம், கார்கால மேகம் என எறிகணைகள்
வானில் வர, எங்கும் தீ மழையின் ஆரவாரம்



காயீன் ஆபேலைக் கொன்றது பொறாமை
அண்ணன், தம்பியை கொல்வது சிறுமை
இஸ்மாயில், ஈசாக் அண்ணன் தம்பி
இறைவா எம் வாழ்வோ உம்மை நம்பி



சுதந்திரம் என்பது அன்பின் பாதை
இருமை கடந்த இறைவனின் கீதை-இறைவா
எல்லோரும் நலம் வாழ வேண்டும்-எல்லோர்
இதயத்திலும் உன் அமைதி வரமாக வேண்டும்

அன்பில் நிலைத்து, உண்மையை வாழ்வாக்க, இறைவன்
நம்மில் வாழும் இன்பம், நம் தேசமோ ஏதேன் வனம்,
நம்முள் மறைந்த இன்பவனம்,ஆணவம் மறையத் தோன்றும்
தூய மனம், தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-
உலகில் நல்மனத்தவருக்கே அமைதி
வானவர் மொழிந்த நற்செய்தி, உன்னதமும்,
நல்மனமும் ஒன்றே- அது நம்முள்ளே

24.10.2024

குருதி எழுதும் கோரக் கவிதை யுத்தம்





குருதி எழுதும் கோரக் கவிதை யுத்தம்,
குண்டு மழையால் எங்கும் இரத்தம், இறைவனை
கூவிக் கதறும் உறவுகளின் அழுகைச் சத்தம்
மண் எங்கும் இரத்தம், வான் எங்கும் புகை மூட்டம்
வாழிடங்கள், ஆலயங்கள் இடிபாடுகளான அவலம்

காஸா, லெபனான் எங்கும் குண்டு மழை
ஹமாஸ், ஹிஸ்புல்லா தலைவர்களைக் கொன்று
கொண்டாடும் இஸ்ரயேலரின் வெற்றிக் களை
ஈரானைத் தாக்கிடத் தொடரும் யுத்த அலை

கண் காணாத இடத்தில் இஸ்ராயேல்
கைதிகளின் சிறையிருப்பு, கண் மறைந்த
சொந்தங்களுக்காய் பாலஸ்தீனரின் தீ மிதிப்பு,
அமைதி இன்றி அப்பாவி மனங்களின் பரிதவிப்பு





விண் ஒளிர, மண் எரிய, உணவின்றி வயிறெறிய
சோகத்தால் எரியும் சொந்தங்கள், மண்ணெங்கும்
மனித இரத்தங்கள், கண்ணீரில் வுழு செய்து
அழுகையால் தொழுதிடும் பந்தங்கள்

இடிபாடுகளில் எம் நடைப்பிண வாழ்க்கை
அழுகையும், கண்ணீரும் எம் பிரார்த்தனை
நாளும் இருவேளை நோன்பு
இரத்தலாய் எம் வாழ்வு

எதிர்காலம் இருளில் மூழ்கிட-வாழும்
நிகழ்காலம் எம்மை நடைப்பிணமாக்கிட
நாளை என்று ஒன்றில்லை
நம்பிக்கை என்பது கேள்வியான நிலை





சுற்றிலும் சாவு, எம்மைச் சூழ்ந்திடும்
மரண இருளில் நாளும் செத்துப் பிழைக்கும்
எரிநரகான வாழ்வு, நோயும், பசியும் வருத்த
தலை சாய்த்து அழ தாய் மடியில்லை
நம்பிக்கை தர தெய்வமுமில்லை
நாம் அநாதைகளானோம்-நாடற்ற அகதிகளுமானோம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே

Pax Ravichandra-11-10-2024

வீர சுதந்திரம்

வென்றால் புவனம், மடிந்தால் சுவனம்
அல்கொமேனியின் பயங்கரவாதக் கீதை
பயங்கரவாதம் ஜிகாத்தான போதனை
குருதியில் அமைதி காணும் வேதனை





வன்மத்தின் இரத்தவாடை சுவாசத்தில் நாற
ஜென்மத்தின் வஞ்சம் நெஞ்சத்தில் ஊற
இஸ்ராயேலரைக் கொல் அல்லது கொல்லப்படு
ஈரான் ஊட்டி வளர்த்த பயங்கரவாதக் கோட்பாடு

நெஞ்சுக்குள் மடிந்தும் மறையாத சொந்தங்களின்
அழுகுரல்கள், கண்களுக்குள் தெரியும் மாறாத
அவலங்கள், இடிபாடான இல்லங்கள், அகதி
அநாதை, அங்கவீனராய்ப் எம் பந்தங்கள்



மண்ணுக்குள் புதைந்த உறவுகள்
மனதுக்குள் விழித்திட, கண்ணுக்குள்
கங்கைகள் பிறந்திட, குமுறும் நெஞ்சுக்குள்
அணையாது எரியும் காங்கைகள்



காஸா எங்கும் சுடுகாடு-தாய்க்குலத்தின்
முகத்திலோ கண்ணீர்க் காடு-அகதிகளுக்கு
மேற்குக் கரையோ தாய் வீடு-பாலஸ்தீனருக்கு
நாடோ கேள்வியான கண்ணீர்க் கனவு

எமக்கென நாம் உரிமை கொண்டாடத்
தாய் நாடு ஒன்றில்லை-எம்மைக் காக்க
எந்தக் கடவுளுமில்லை, நாம் அகதிகளானோம்
கண்ணீர், செந்நீரில் மலரும் குருதிப்பூக்களானோம்






உலகெங்கும் பாலஸ்தீன அகதிகள்
உரிமையிழந்த மக்களோ ஏழைகள்
பயங்கரவாதிகளோ பெருநிதிச் செல்வர்கள்
அப்பாவிகளை ஆட்டுவிக்கும் அரக்கர்கள்

பகைமையைப் பகைமையால் தணிக்க முடியாது
பகைமையை அன்பினால் தணியுங்கள்
என்றுமுள்ள தர்மத்தின் கோட்பாடு இதுவே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-11-2024

வேஷம்





கூடு கட்டி குஞ்சு பொரித்த மரம் வேரோடு சாய்ந்திட,
குஞ்சுகளைத் தேடி பதறி கூவிக் கதறும் அஞ்சுகங்கள்,
குடிமனைகள் ஒன்றாய்க் குண்டு வீச்சில் சரிந்திட,
இடிபாடுகளுக்குள் புதைந்து மறைந்த சொந்தங்கள்


வானெங்கும் கரும்புகை, வாக்களிக்கப்பட்ட பூமியில்
மாறாத பகை, அமைதி காணாது, ஆயுதம்
ஏந்தி வாழும் வாழ்வில் தீராத அச்சத்தின் நிலை
கொல் அல்லாது கொல்லப்படுவாய் வாழ்வின் நிலை

குண்டு மழையால் நொந்த பூமியில்
குடியிருப்புக்கள் இடிபாடாகும்,
சொந்தமிழந்த உறவுகள் அநாதைகளாகும்
பழிக்குப் பழி போராளிகளின் கீதையாகும்



விடியல் காணாத நாட்கள், அமைதியோ
கானல் நீரான துயரங்கள்
கண்ணீர் காயாத முகங்கள், தந்தை,
தாயோ மண்ணில் புதைந்த அவலங்கள்

வானெங்கும் ஏவுகணைகளின் ஆர்ப்பாட்டம்
வல்லமைதான் வேதம் போராளிகளின் மனப்பாடம்
அமைதியைப் பழிக்கும் குண்டுச் சத்தங்கள்
அழிவுகளால் போடும் அழியாத கோலங்கள்





ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு ஓடும்
அகதிகளின் வாழ்வோ ஹச் யாத்திரை?
மனிதம் கொன்று மிருகம் வாழும் பூமியில்
குழந்தைகளின் முகங்களில் கண்ணீர்த் திரை

உணவு, உடை, நீரின்றி நாளும் உபவாசம்
உறங்கிட ஓரிடமின்றி, ஒதுங்கிட மலசல கூடமின்றி
மனம் வெதும்பிடும் தாய்க்குலம்-அல்லாகு அஃக்பர்
கோஷம், ஐவேளைத் தொழுகையோ வேஷம்

பூவான மனமும் முள்ளாகும்,
புகை படிந்த வானை வெறித்து நோக்கும்
விழிகள் நீர் சிந்திச் சிவந்திட, கனிந்த
இதயம் கல்லாகும், வாழ்வு போராட்டமாகும்

மண்ணெங்கும் புதைகுழிகள், விண்ணெங்கும் ஏவுகணைகள்,
தணல் ஆறாத பூமியில் சிக்கித் தவிக்கும் ஆத்மாக்கள்,
இறைவாக்கினரும், இயேசு பெருமானும் உலாவிய பூமியில்
நாளும் கல்வாரிப் பலிகள்,குருதியும், கண்ணீரும் காயாத நதிகள்



யுத்தத்தில் காணாமற்போன இனிய கனாக்கள்
இரத்தம் களவாடிச் சென்ற புது வசந்தங்கள்
நாளை என்று ஓர் நாள் எமக்கில்லை
நமனோடு வாழும் நிலையோ மாறாத தொல்லை



சிந்திய கண்ணீருக்கும், செந்நீருக்கும்
நீதி யார் வழங்குவார்? அழுகைச் சுவரும்,
அல் அஃக்ஸாவும் கல்லானது, தொழுகையும்,
சலாமும் பொருள் இழந்திடச் சத்தமானது

இறையில்லம் பாழடைந்து போனது,
இறைகுலம் போராடி மடியுது
பலியை அல்ல இரக்கமே இறை வேண்டுவது
வேண்டாத வேதமானது

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-பூவுலகில்
நல்மனத்தவருக்கே அமைதி
வானவர் சொன்ன நற்செய்தி -ஏற்காத நியதி

இன்றும் ஈசாக்கை பலி கேட்கும் யாவே?
இஸ்மாயிலைப் பலிகேட்கும் அல்லா?
தோராவும், அல் குரானும் துறந்து மதவாதத்தின்
நரபலியோ குர்பான், இறைவன் வேண்டாத ஈமான்





இருளை, இருளால் அகற்றமுடியாது
இருளை ஒளியால் அகற்றுங்கள்
பகைமையைப் பகைமையால் தணிக்க முடியாது
பகைமையை அன்பினால் தணியுங்கள்
என்றுமுள்ள தர்மம் இதுவே
பெருமான்கள் புத்தர், இயேசு மொழிந்த
அன்பின் வேதம் இனிதே

குழந்தை இயேசுவை சிலுவையில் அறையும்
கொடுமை, பட்டினியால் அப்பாவி அகதிகளை
மண்டியிட வைக்கும் சிறுமை
என்றுதான் மறையுமோ? என் இறைவா
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-11-2024